ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2144/3 - 2019 ඔක්තෝබර් මස 07 වැනි සඳුදා - 2019.10.07

*2144/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தின், காலி கடவத் சதர பிரதேச செயலாளர் பிரிவில், காலி மாநகர சபையின் எல்லையினுள் 98 ஏ, மடவலமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில், மடவலமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள நில அளவீடு சார்ந்த வரைபட இல. 810039 வலயம் 10 இல் பத்திர இல. 02 இல் துண்டு இல. 118 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள 0.0023 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் பின்வருமாறு :

01. **துண்டு இல. 118 - காணியின் பெயர் : டிங்கிநய்தெகே வத்த; விபரம் : வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்று (இயக்கும் இயந்திர அறை) காணப்படுகின்றது; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : கண்டறிய முடியவில்லை; விஸ்தீரணம் : 0.0023 ஹெக்டயார்**

வடக்கு : துண்டிலக்கம் 119; கிழக்கு : துண்டிலக்கம் 119 மற்றும் துண்டிலக்கம் 62; தெற்கு : துண்டிலக்கம் 62 மற்றும் 60; மேற்கு : துண்டிலக்கம் 60.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு காலி கடவத் சதர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஹிமாலி ரத்னவீர,
பிரதேச செயலாளர்,
காலி - கடவத்சதர.

பிரதேச செயலகம்,
காலி - கடவத்சதர,
2019, செத்தெம்பர் 30.

*10 - 693*

1A - G 31195 - 15 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.